மாவட்ட கொள்ளை நோய் தடுப்புக்குழு தலைவர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: டாக்டர். டி.ஜி. வினய் இ.ஆ.ப.,

ந.க.எண்: 11945/2020/தே6 நாள் : .03.2020

பொருள் : கொள்ளை நோய் தடுப்பு — மதுரை மாவட்டம்- கோவிட் -19 கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்- அனைத்து துறை அலுவலர்கள் கொண்ட குழு (All Department Officials) அமைத்தல்- ஆணைகள் பிறப்பித்தல்.

பார்வை :
1. தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்களின் கடிதம் எண் 1/2020 நாள் 15.03.2020
2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை(ப்பி1) துறை அரசாணை எண் (நிலை) எண் 347 நாள் 16.03.20.
3. தொடர்புடைய இதர ஆவணங்கள்.

ஆணைகள் :

மதுரை மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று தொடர்பாக 24 மணி நேரம் செயல்படும் கட்டுப்பாட்டு அறை District Emergency Center செயல்பட்டு வருகிறது. நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை பணிகளை ஒருங்கிணைப்பதற்காக (High Level Co - ordination Committee) கீழ்கண்டவாறு குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழு உறுப்பினர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் இருந்து கொரோனா நோய் தொற்று தொடர்பாக எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பொதுமக்களிடம் எழும் சந்தேகங்களை தீர்த்து வைப்பதற்கும், மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து பெறப்படும் தகவலின் பேரில் உரிய உத்திரவுகள் தங்கள் துறை அலுவலர்களிடம் வழங்கி பணிகள் மேற்கொண்டு அதன் விபரத்தை தெரிவிக்குமாறும் உத்திரவிடப்படுகிறது.

2) பெறப்பட்ட விபரம், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விபரத்தினை பிரதி தினந்தோறும் அலுவலர் வாரியாக காலை 10.00 மணிக்கும் மாலை 08.00 மணிக்கும் மாவட்ட ஆட்சியரை நேரடியாக சந்தித்து அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

| பெயர் மற்றும் பதவி | செல்லிடைப் பேசி எண் | செய்ய வேண்டிய பணிகள். |
|---|---|---|
| 1. திரு. நாகஜோதி, துணை ஆணையர் / மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை மாநகராட்சி, மதுரை. | 9443739500 | 1. மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரப்பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், அனைத்து இடங்களிலும் கிருமி நாசினி மருந்து தெளிப்பது தொடர்பாகவும் கட்டுப்பாட்டு அறைக்கு வரும் புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் குறைகளை தீர்த்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>2. அத்தியாவசியப்பொருட்களான அரிசி, காய்கறிகள், பால், மளிகை பொருட்கள் கிடைப்பது தொடர்பாக கட்டுப்பாட்டு அறைக்கு வரும் புகார்களின் |

| | | |
|---|---|---|
| | | மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் குறைகளை தீர்த்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும். உறுதி செய்ய வேண்டும்.<br>3.குடிநீர் விநியோகம் தொடர்பாக கட்டுப்பாட்டு அறைக்கு வரும் புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் குறைகளை தீர்த்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>4. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள் பார்சல் வழக்குவது தொடர்பாக வரும் புகார்களின் மீது உடன் நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>5.நகர்புறங்களில் வீடற்ற ஏழைகளுக்கு உணவு, குடிநீர் கிடைப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடன் நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும். |
| 2.திருமதி. முருகேஸ்வரி,<br>மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை. | 9445000335 | 1. நியாய விலைக்கடைகளில் பொதுமக்களுக்கு சீராக விநியோகிப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடன் நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>2. அத்தியாவசியப்பொருட்களான அரிசி, காய்கறிகள், பால், மளிகை பொருட்கள் மொத்த வியாபாரிகள் பதுக்கல் செய்யாமல் நியாயமான விலைக்கு கிடைப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்ய வேண்டும்.<br>3. நியாயவிலைக்கடைகளை தினசரி திறந்து அதிக கூட்டம் சேர்க்காமல் சமூக விலகலை கடைபிடித்து பொருட்கள் விநியோகம் தொடர்பாக பெறப்படும் புகார்கள் தொடர்பாக உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்ய வேண்டும்.<br>4. எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் தொடர்பாக பெறப்படும் புகார்கள் தொடர்பாக உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்ய வேண்டும்.<br>5. கட்டுப்பாட்டு அறையில் குடிமைப்பொருள் விநியோகம் தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3.திரு. C. உதயகுமார்<br>காவல் துணை கண்காணிப்பாளர்(மாவட்ட குற்றப்பதிவேடுகள் பிரிவு), மதுரை மாவட்டம். | 94981 64247 | 1. அத்தியாவசியப்பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட காவல்துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>2. வெளிநாடுகளில் இருந்து வந்து அவரவர்களது வீடுகளில் தனிமையில் உள்ளவர் தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது மீது உடனடியாக சம்மந்தப்பட்ட காவல்துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>3. அத்தியாவசியப் பொருட்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யபடுவது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட காவல்துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும். |
| 4.திரு. கிருஷ்ணமூர்த்தி,<br>காவல் உதவி ஆணையர்(குற்றப்பதிவேடுகள் பிரிவு), மதுரை மாநகர், மதுரை. | 94981 05940 | |
| 5.திரு. செல்லத்துரை,<br>உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை. | 74026 07923 | 1.சுகாதாரப்பணிகள் மேற்கொள்வது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>2.அத்தியாவசியப்பொருட்களான அரிசி, காய்கறிகள், பால், மளிகை பொருட்கள் கிடைப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br>3.குடிநீர் விநியோகம் தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும். |
| 6.திருமதி.பி. தனலெட்சுமி,<br>மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்), மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மதுரை. | 94861 43266 | 4. 1.விவசாயிகளுக்கு தேவையான விதை, உரம் போன்ற இடுபொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள் தடையின்றி கிடைப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br><br>2. விளைவிக்கப்பட்ட விவசாய விளை பொருட்களை தடையின்றி சந்தைப்படுத்துவது தொடர்பாக |

| | | |
|---|---|---|
| | | பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br><br>3. உரப்பொருள் விற்பனை செய்யும் நிறுவனங்கள் அதிக விலைக்கு உரப்பொருட்களை விற்பனை செய்வது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும். |
| 7.திரு. பூபதி,<br>துணை இயக்குநர் (தோட்டக்கலை)<br>மதுரை. | 94432 22355 | 1.விவசாயிகளுக்கு தேவையான உரம், பூச்சி மருந்து போன்ற இடுபொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள் தடையின்றி கிடைப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br><br>2.விளைவிக்கப்பட்ட பூக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற பொருட்களை அழுகாவண்ணம் தடையின்றி சந்தைப்படுத்து தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.<br><br>3.உரப்பொருள் விற்பனை செய்யும் நிறுவனங்கள் அதிக விலைக்கு உரப்பொருட்களை விற்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும். |
| 8.திரு. விவேகானந்தன்,<br>வேளாண்மை இணை இயக்குநர்,<br>மதுரை. | 94439 90964 | கட்டுப்பாட்டு அறையில் இருந்து மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) மற்றும் தோட்டக்கலை துணை இயக்குநர் ஆகியோரின் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்ய வேண்டும். |

2) மேற்படி அலுவலர்கள் காலை முதல் மாலை வரை நேரில் கட்டுப்பாட்டு அறையில் இருந்து பணி புரியவும் இரவுப்பணிக்கு தங்கள் துறை சார்ந்த அடுத்த நிலை அலுவலர்களை பணிக்கு அமர்த்தி அதன் விபரத்தை உடன் தெரிவிக்குமாறும் ஆணையிடப்படுகிறார்கள்.

25/3/2020

மாவட்ட கொள்ளை நோய் தடுப்புக்குழு தலைவர்
மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர்,
மதுரை.

பெறுநர்,

சம்மந்தப்பட்ட நபர்கள்.

25/3/20

நகல் : காவல் ஆணையர், மதுரை.
நகல்: காவல் கண்காணிப்பாளர், மதுரை.
நகல்: ஆணையாளர், மதுரை மாநகராட்சி,
நகல்: கூடுதல் ஆட்சியர் மாவட்ட வளர்ச்சி முகமை.
நுகல் : முதல்வர், அரசு இராஜாஜி மருத்துவ மனை மதுரை.
நகல்: இணை இயக்குநர் (சுகாதாரம்)உசிலம்பட்டி.
நகல்: துணை இயக்குநர் (சுகாதாரம்) மதுரை.